மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | :நடேச படையாச்சி | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வி.களத்தூர் | வயது | : 72 /2025 |

**முதல் விசாரணை :**

(i) நான் இவ்வழக்கில் 1ம் வாதியாவேன். 2ம் வாதி எனது தாயார் ஆவார். 3 முதல் 5 வாதிகள் எனது சகோதர சகோதரிகள் ஆவார்கள். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எனக்காவும், இதர வாதிகளுக்காகவும் சேர்த்து எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 24.01.2024ம் தேதியிட்ட OS.No.39/2019(Old OS.No.753/2004)ல் ஏற்பட்ட டிகிரியின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (வழக்கிற்கு பொருந்தாத ஆவணம் என எதிர் தரப்பால் ஆட்சேபனை செய்யப்பட்டது. அந்த ஆட்சேபனையுடன் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 24.01.2024ம் தேதியிட்ட OS.No.39/2019(Old OS.No.753/2004)ல் ஏற்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்.((வழக்கிற்கு பொருந்தாத ஆவணம் என எதிர் தரப்பால் ஆட்சேபனை செய்யப்பட்டது. அந்த ஆட்சேபனையுடன் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)